1993 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு வறட்சி வருவதை எண்ணிப் பார்த்து வறட்சியினால் தண்ணீர், குடி தண்ணீர் பஞ்சம் இருக்கக் கூடாது என்று எண்ணி தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் முன்கூட்டியே அதற்கு வேண்டிய பணம் ஒதுக்கியதனால் குடிதண்ணீர் பஞ்சம் இல்லாமல் சென்ற ஆண்டு சமாளிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல இந்த ஆண்டும்.. (குறுக்கீடுகள்)

3. சிறப்பு கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கமுதி போலீஸ் நிலையம் அருகில இலங்கைப் போராளி தப்பிக்க முயன்றபோது சுடப்பட்டது குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பொழுது ஒரு முக்கியமான பிரச்சினையை, வேடசந்தூர் தொகுதியினுடைய வறட்சி பற்றிய அறிவிப்பைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அவரைப் பேச விடாமல், அரசாங்கம் அந்த வறட்சி நிவாரணப் பணிக்கு எடுக்கிற முடிவுகளுக்குத் தடையாக இருப்பது முறையல்ல. (குறுக்கீடுகள்).

(இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர்.

முற்பகல் 11-35

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையைப் பொறுத்த வரையிலும் நீண்ட நெடுங்காலமாகவே ஜீரோ ஹவர் என்று ஒன்று இல்லவே இல்லை. இந்த ஜீரோ ஹவரை எந்த ஒரு பேரவைத் தலைவரும் அனுமதித்ததும் இல்லை. எங்கேயும் சட்ட விதிகளில் ஜீரோ ஹவர் என்று ஒன்று இல்லை. தாங்களாக விளக்கங்கள் கேட்க வேண்டுமென்று சில சமயங்களில் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கேட்கிற போது, அவர்களுக்குத் தாங்கள் உரிமை தந்து, பிரச்சினைகளை எழுப்பலாம் என்றும், அதற்கான விடையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ அல்லது உரிய அமைச்சரோ எடுத்துத் தெரிவிப்பதன் மூலம் நாட்டு மக்களுக்குத் தெளிவும், திடபமும் ஏற்படும் என்று கருதி, தாங்கள் பெருந்தன்மையோடு அவர்களை சில பிரச்சினைகளை எழுப்ப அனுமதிக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு நான் அனுமதித்ததுகூட, 2 பிரச்சினைகளும் எதிர்க் கட்சியினர் கொடுத்ததே. அதிலும் முக்கியமான பிரச்சினை, திரு. போளூர் வரதன் அந்தப் பகுதிக்குத் தண்ணீர்விட வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அதெல்லாம் விதி 55-லேதான் அனுமதிக்கப்படும். அதை ஸ்பெஷல் மென்ஷனாக பேசுங்கள், பேசுங்கள் என்று நான் சொன்னபோது, அந்த உறுப்பினர் பேச எழுந்தபோது, பக்கத்தில் இருந்தவர்கள் அவரைப் பிடித்து, அழுத்தி உட்கார வைத்தார்கள். மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒரு பிரச்சினையை எழுப்ப வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தண்டாயுதபாணி அவர்கள் கேட்டபோது, அதற்குத் தாங்கள் பெருந்தன்மையோடு அனுமதி அளித்தீர்கள். அதற்குப் பதிலையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக இருக்கின்ற நிலைமையை எடுத்துத் தெரிவித்தார்கள். ஆகவே கமுதியிலே ஒருவர் சுடப்பட்டார். அவர் விடுதலைப் புலியா, அல்லவா என்ற பிரச்சினையை அவர் எழுப்புகிறபோது, அதற்கு திட்பமாக, திட்டவட்டமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே பதிலை எடுத்துத் தெரிவித்து, அதற்கான விளக்கத்தை இந்த நாடு பெற வேண்டுமென்பதற்காக தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை விட்டு மேலும் மேலும் பேசுவார்களானால், அதற்குப் பதில் இல்லாமல் நின்று விடுமானால், இந்த நாட்டிலே குழப்பம் ஏற்படுமென்ற காரணத்தால்தான், அந்தப் பிரச்சினையை முறைப்படி அவர்கள் எழுப்பினால் அதற்கும் பதில் சொல்ல நான் தயாராக இருக்கிறேன் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவாகக் குறிப்பிட்டார்கள். இதற்குப் பிறகும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்கள் எல்லோரும் சேர்ந்து இங்கே அனுமதிக்க வேண்டும், அனுமதிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள் என்றால், ஏற்கெனவே அவர்கள் திட்டம் போட்டு வந்திருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை. இங்கே ஏதேனும் குழப்பம் நடத்த வேண்டும். இடைஞ்சல் செய்ய வேண்டும். குறுக்கீடு செய்ய வேண்டும் என்ற நோக்கம்தான் அதில் இருக்கிறதே தவிர சட்ட மன்றத்தில் விளக்கம் பெற வேண்டுமென்றோ, அதன் மூலம் நாடு நலம் பெற வேண்டுமென்றோ எண்ணி, இந்தப் பிரச்சி சினையை எழுப்புகிறார்களா என்று தெரியவில்லை. ஆனாலும் கூட, இப்படிப்பட்ட முறைகள் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் சட்டமன்றத்தினுடைய விதி முறைகளுக்கு முற்றிலும் உகந்தவை அல்ல என்பதை இவர்கள் உணராவிட்டாலும், நாட்டு மக்கள் தெளிவாக உணர்வார்கள். ஆகவே இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் திட்பமாக, தெளிவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ''தில் சொன்னதற்குப் பிறகும்,

1993 ஏப்ரல் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இங்கே கூச்சல் போட்டுக் கொண்டு, இந்த அவையினுடைய நேரத்தை வீணடித்துக்கொண்டிருந்தது மிக மிகக் கண்டிக்கத் தக்கது என்பதை மட்டும் அவைக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினையில் எதிர்கட்சித் தலைவர் தன்னைப் பேசவே அனுமதிப்பதில்லை, அனுமதிப்பதில்லை என்பதைத் திரும்பத் திரும்ப பல்வேறு சந்தர்ப்பங்களில் சொல்லி இருக்கிறார். அவரைப் பேச நான் அனுமதித்து, அந்தப்பிரச்சினையைப்பற்றி எழுப்புவதற்கு அவரை அனுமதித்து, அவரும் ஒரு கருத்தைச் சொன்னார். அந்தக் கருத்தைச் சொன்னதற்குப் பிறகு, அதற்கு நானும் பதிலைச் சொன்னேன். அப்படிப் பதில் சொன்னதற்குப் பிறகுதான் இதந்தப் பிரச்சினையே எழுந்ததே தவிர, அவரைப் பேசவே அனுமதிக்கவில்லை என்பது சரியல்ல.

முற்பகல் 11-40

4. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(அ) திண்டுக்கல் அண்ணா மாவட்டம், வேடசந்தூர் தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டிய அவசியம் குறித்து—தொடர்ச்சி.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள அறிக்கையில் அண்ணா மாவட்டம் முழுமைக்கும் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ரூ. 99.58 லட்சமும் மற்ற வேலைத் திட்டங்களுக்காக ரூ. 39.87 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே வறட்சியின் கோரப்பிடியில் சிக்கியிருக்கிற வேடசந்தூர் தொகுதிக்கு இதில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது? அது எந்த இனங்களில் செலவழிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி வறட்சி ஏற்படுகிறபோது வறட்சி வந்தபிறகு அதற்குப் பிறகு நடவடிக்கை எடுத்தால் குடி தண்ணீர் பஞ்சம் வந்துவிடும் என்பதற்காக முன்கூட்டியே பணம் ஒதுக்கியும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு முன்னாலே பணம் ஒதுக்கியும் எங்கெங்கே வறட்சி வரும், எங்கெங்கே குடிதண்ணீர் பஞ்சம் வரும் என்று சொல்லி, நடவடிக்கை எடுத்த